இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 83 – ஒலி : 33 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – ஆவணி 26 – புதன்கிழமை 11 செப்டம்பர் 2024 – கோவை ★★ 16 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 83 - Issue 33: Thiruvalluvar Year - 2055 - Aavani 26 - Wednesday 11 September 2024 - Kovai ★★16 Pages ₹ 5.00

## பேரறிஞர் அண்ணா கண்ட கழகம்! கலைஞர் பெருக்கி வளர்த்த கழகம்!

# வீதிகள் - வீடுகள்தோறும் கழகக் கொடி ஏற்றிடுவீர் !

## பவள விழாவை முன்னிட்டு கழகத் தோழர்களுக்கு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் வேண்டுகோள் !

**சிகாகோ, செப்.11-**

**கழகத்தின் பவள விழாவை யொட்டி கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சிகாகோ விலிருந்து வெளியிட்டுள்ள அறிக் கையில் “ பவள விழாவை முன் னிட்டு வீதிகள், வீடுகள் தோறும் கழகக் கொடி ஏற்றிடுவீர்” என்று கழகத் தோழர்களுக்கு வேண்டு கோள் விடுத்துள்ளார்.**

காஞ்சித் தலைவன் பேரறிஞர் அண்ணா அவர்களால் 1949-ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட “திராவிட முன்னேற்றக் கழகம்” என்ற பேரியக்கம், அண்ணா வின் தம்பிகளால் வளர்க்கப்பட்டு அவரது தம்பிகளில் தலையாய தம்பியான முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் 50 ஆண்டு களுக்கு மேல் கட்டிக் காக்கப்பட்டு வருகிறது.

இந்நிலையில் நம்முடைய உயிரினும் மேலான அன்புத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டா லின் அவர்களின் தலைமையில் வெற்றிகரமாக இயங்கி கொண் டிருக்கிற தி.மு.கழகம் பவள விழா ஆண்டை நிறைவு செய்கிறது.

ஒரு மாநில கட்சியான தி.மு. கழகம் முக்கால் நூற்றாண்டு காலம், தமிழ்நாட்டு மக்களின் நலனுக்காக பல போராட்டங் களை நடத்தியும் இந்தியா விலேயே முதன் முறையாக ஒரு மாநில கட்சியான தி.மு.க. தமிழ் நாட்டு மக்களின் பேராதரவுடன் வெற்றி பெற்று ஆட்சியை பிடிக்க முடியும் என்ற வரலாற்று சாத னையை நிகழ்த்தியும் வருகிறது.



இந்தியாவுக்கே முன்னோடி யான பல திட்டங்களை செயல் படுத்தி, சட்டங்களை உருவாக்கி, இன்று இந்தியாவை வழிநடத் தக் கூடிய வகையில், தி.மு.கழ கம் தனக்கென தனித்துவமான இடத்தைப் பெற்றுத் திகழ்கிறது.

பேரறிஞர் அண்ணா கண்ட இப்படிப்பட்ட திராவிட முன்னேற்றக் கழகம், தனது 75-வது ஆண் டினை பவள விழாவாக கொண் டாடி மகிழ்ந்து வருகிறது.

இந்நிலையில் கழகத் தலை வர் அவர்கள் நேற்று முன்தினம் கழக ஒருங்கிணைப்புக் குழுவு டன் பல்வேறு கழகப்பணிகள் மற்றும் சட்டமன்ற தேர்தல் பணிகள் குறித்து ஆலோசனை நடத்தினார்.

அதன் தொடர்ச்சியாக கழகத் தின் பவளவிழாவை முன்னிட்டு கழகத்தினர் அனைவரது இல் லங்கள், அலுவலகங்கள், வணிக வளாகங்களில் கழகக்கொடி ஏற் றிக் கொண்டாடிட வேண்டும் என்று அறிக்கை வெளியிட் டுள்ளார்.

இதுகுறித்து முதலமைச்சர் - கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

**தந்தை பெரியாரின் கொள் கைகளை ஜனநாயக வழியில் சட்டங்களாகவும் திட்டங்களாக வும் நிறை வேற்றிடும் நோக்கத் துடன் பேரறிஞர் அண்ணா அவர் களால் 1949-ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் கட்டிக் காக்கப்பட்ட திராவிட முன்னேற் றக் கழகம் எனும் அரசியல் பேரி யக்கம், 75 ஆண்டுகளாக மக்களுக்குப் பணியாற்றி, இந்த 2024-ஆம் ஆண்டு தனது பவள விழா நிறைவினைக் கொண்டாடு கிறது.**

**பவளவிழாவையொட்டி கழகக் கொடிக் கம்பங்கள் அனைத்தும் புதுப்பிக்கப்பட்டு, அதில் அந்தந்தப் பகுதியில் கழகத்திற்காக அல்லும் பகலும் உழைத்த மூத்த முன்னோடி களின் கரங்களால் நம் இருவண் ணக் கொடியை ஏற்றிப் பட்டொளி வீசிப் பறந்திடச் செய்திட வேண்டும் என மாவட்டச் செயலாளர்கள் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.**

**அதன்படி வீதிகள்தோறும் பறக் கும் இருவண்ணக்கொடி நம் வீடு கள்தோறும் பறந்திட வேண்டும். கழகக்கொடி பறக்காத கழகத்தின ரின் வீடுகளே இல்லை என்னும் வகையில் பவளவிழாவை முன் னிட்டு நம் அனைவரது இல்லங் கள் அலுவலகங்கள் - வணிக வளாகங்களில் கழகக்கொடி ஏற் றிக் கொண்டாடுவோம்.**

இவ்வாறு கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது அறிக்கையில் கூறியுள்ளார்.



அமெரிக்க நாட்டிலுள்ள பல்வேறு தமிழ்ச் சங்கங்களின் நிர்வாகிகளின் சந்திப்பு நிகழ்ச்சிக்கு 8.9.2024 அன்று வருகைத் தந்த தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு அமெரிக்க வாழ் தமிழர்கள் உற்சாக வரவேற்பு அளித்தனர். இந்நிகழ்வின்போது, முதல்வரின் துணைவியார் திருமதி.துர்கா ஸ்டாலின், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா, அயலகத் தமிழர் நலவாரியத்தின் தலைவர் கார்த்திகேய சிவசேனாபதி ஆகியோர் உடனிருந்தனர்.

### தென்னிந்திய நடிகர் சங்கக் கட்டடம் கட்ட

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அளித்து வரும் ஆதரவுக்கு நன்றி!

### அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ரூ.5 கோடி ஏற்பாடு செய்தமைக்கும் – சங்கப் பொதுக்குழுவில் நன்றி தெரிவித்து தீர்மானம்!

**சென்னை, செப். 11 -**

**தென்னிந்திய நடிகர் சங்கக் கட்டடம் கட்ட முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் அளித்து வரும் ஆதரவுகளுக்கு நன்றி தெரிவித்து நடிகர் சங்கப் பொதுக் குழு தீர்மா னம் நிறைவேற்றியுள்ளது. மேலும் இளைஞர் நலன் மற்றும் விளை யாட்டு மேம்பாட்டுத்துறை அமைச் சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வங்கியில் டெபாசிட் செய்திட சொந்த நிதி 1 கோடியுடன் மேலும் 5 கோடி ஏற்பாடு செய்து தந்த மைக்கு நன்றி தெரிவித்தும் தீர்மா னம் நிறைவேற்றப்பட்டது.**

தென்னிந்திய நடிகர் சங்க பொதுக்குழு கூட்டம், அதன் தலைவர் நடிகர் நாசர் தலைமையில் 8.9.2024 அன்று நடைபெற்றது.

இக்கூட்டத்தில் பொதுச் செய லாளர் நடிகர் விஷால், பொருளா ளர் நடிகர் கார்த்தி, துணைத் தலைவர்கள் பூச்சி முருகன், கருணாஸ் உட்பட நடிகர், நடிகை கள் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தென் னிந்திய நடிகர் சங்கக் கட்டடம் கட்டப்படுவதற்கு அளித்துவரும் ஆதரவுகளுக்காக நடிகர் சங்கப் பொதுக்குழு பாராட்டு தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றியது.

நடிகர் சங்கக் கட்டடம் 25 கோடி ரூபாய் வங்கிக் கடன் மூலம் கட்டப்படுகிறது.

**அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ரூ.1 கோடி நன்கொடை!**

இதற்கு தேவையான 12 கோடி ரூபாய் வங்கிக் கடன் டெபா சிட் தொகைக்காக இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தம்சொந்த நிதியிலிருந்து ஒரு கோடி ரூபாய் வழங்கியுள்ளார் கள். மேலும் தம் நண்பர்கள் மூலம் 5 கோடி ரூபாய் வங்கி யில் டெபாசிட் செய்வதற்கும் பரிந் துரைகள் செய்துள்ளார்.

அதனைத் தொடர்ந்து, நடிகர் சங்கப் பொதுக்குழு கூட்டம் நடை பெற்ற போது, அதில் பேசிய சங்க நிர்வாகிகள், சங்கக் கட்டடத்துக் காக கடன் வாங்கும் போது தேவையான டெபாசிட் தொகை யில் பெரும் தொகையை அமைச் சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஏற்பாடு செய்து கொடுத்ததற்கு நன்றி தெரிவித்துப் பாராட்டிப் பேசினர்.

மேலும், தென்னிந்திய நடிகர் சங்கப் பொதுக்குழு கூட்டத்தில் அமைச்சர் பெருமக்களுக்கும், குறிப்பாக வங்கி வைப்புத் தொகைக்காக பெரும் நிதி திரட்டிட ஏற்பாடு செய்தமைக்காக இளை ஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக் கும் நன்றி தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

# அமெரிக்க தமிழ்ச் சங்கத்தினர் வாழ்த்து!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் பெருமிதம்!

**சிகாகோ, செப். 11-**

**முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை 8.9.2024 அன்று சிகாகோவில், அமெரிக்க நாட்டிலுள்ள பல்வேறு தமிழ்ச் சங்கங்களின் நிர்வாகிகள் சந்தித்து, தமிழ்நாட்டிற்கு தொழில் முதலீடுகளை ஈர்ப்பதற்காக அமெரிக்க நாட் டில் அரசு முறை பயணம் மேற்கொண்டுள்ள முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் பய ணம் வெற்றி பெற வாழ்த்துகளை தெரிவித்துக் கொண்டனர்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான அரசு ஆட்சிப் பொறுப் பேற்ற இந்த மூன்று ஆண்டுகளில், அதிக முதலீடுகளை ஈர்க்கும் உயர் தொழில்நுட்பம் வாய்ந்த தொழில்களையும், அதிக எண்ணிக் கையிலான வேலைவாய்ப்புகளை உருவாக் கும் தொழில்களையும் ஈர்த்துள்ளதோடு, 2030ஆம் ஆண்டிற்குள் 1 டிரில்லியன் அமெ ரிக்க டாலர் பொருளாதாரமாக தமிழ்நாட்டை மாற்ற வேண்டும் என்ற இலக்கை அடைவ தற்காக பல்வேறு நடவடிக்கைகளையும் முனைப்போடு எடுத்து வருகிறது.

அந்த வகையில், வளர்ச்சியின் அடை யாளமாக திகழும் தொழில் நிறுவனங்களை தமிழ்நாட்டில் அதிக அளவில் தொடங்கிட முதலீடுகளை ஈர்த்திடும் வகையிலும், இளை ஞர்களுக்கு அதிக எண்ணிக்கையிலான வேலைவாய்ப்புகளை உருவாக்கிடவும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அமெரிக்க நாட்டில் அரசு முறைப் பயணம் மேற்கொண்டு வருகிறார்.

**தமிழ்ச்சொந்தங்களோடு உரையாடினார்!**

இந்த பயணத்தின் போது முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில் உலகின் பல் வேறு முன்னணி நிறுவனங்களுடன் புரிந் துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்ட தோடு, பல்வேறு நிறுவனங்களின் உயர் அலுவலர்களை சந்தித்து தமிழ்நாட்டில் புதிய தொழில் முதலீடுகளை மேற்கொள்ள அழைப்பும் விடுத்தார்.

மேலும், இப்பயணத்தில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அமெரிக்க வாழ் தமிழர்களை சந்தித்து, அமெரிக்க தமிழ்ச் சங் கங்களின் சார்பில் சான் பிரான்சிஸ்கோ மற் றும் சிகாகோவில் நடைபெற்ற நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டு, தமிழ் சொந்தங்களோடு கலந்துரையாடினார்.

**அமெரிக்க தமிழர்கள் வாழ்வு சிறக்க வாழ்த்துகள்!**

அதன் தொடர்ச்சியாக, 8.9.2024 அன்று சிகாகோவில், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை, தமிழ்நாடு அறக்கட்டளை, வட அமெரிக்காவின் தமிழ்ச் சங்கங்களின் கூட் டமைப்பு -FeTNA, சிகாகோ தமிழ்ச் சங்கம், அறம் சிகாகோ, லேக் கவுண்டியில் உள்ள தமிழர்கள் சங்கம், அகரம் தமிழ் அகாடமி, அன்னை தமிழ் அகாடமி, செயின்ட் லூயிஸ் தமிழ்ச் சங்கம், இந்தியா தமிழ்ச் சங்கம், கிரேட்டர் மில்வாக்கி தமிழ்ச் சங்கம், மெக் லீன் மாவட்ட தமிழ்ச் சங்கம், மிச்சிகன் தமிழ்ச் சங்கம், அயோவா தமிழ்ச் சங்கம், வடகிழக்கு விஸ்கான்சின் தமிழ்ச் சங்கம், விஸ்கான்சின் தமிழ்ச் சங்கம், மினசோட்டா தமிழ்ச் சங்கம், டென்னசி தமிழ்ச் சங்கம், கென்டக்கி தமிழ்ச் சங்கம், அமெரிக்க தமிழ் தொழில்முனைவோர் சங்கம் (ATEA), உல களாவிய எங்கள் குழுக்கள் சங்கம், தமிழ் தொழில்நுட்ப தொழில்முனைவோர் கவுன் சில் (TTEC), எழுச்சி அமெரிக்கா சங்கம், கொலம்பஸ் தமிழ்ச் சங்கம், கன்சாஸ் தமிழ்ச் சங்கம், வடகிழக்கு ஒஹியோ தமிழ்ச் சங் கம், பியோரியா தமிழ்ச் சங்கம், டேட்டன் தமிழ்ச் சங்கம், அமெரிக்க தமிழ் மருத்துவ சங்கம் (ATMA), அமெரிக்க தமிழ்ப் பள்ளிகள் சங்கம், கிரேட்டர் சின்சினாட்டி தமிழ்ச் சங்கம் (GCTS), குவாட் சிட்டி தமிழ்ச் சங்கம் ஆகிய சங்கங்களின் நிர்வாகிகள் சந்தித்து, தமிழ் நாட்டிற்கு தொழில் முதலீடுகளை ஈர்ப்பதற் காக அமெரிக்காவிற்கு அரசு முறை பயணம் மேற்கொண்டுள்ள முதலமைச்சர் அவர்களின் பயணம் வெற்றி பெறவும், அதிக அளவிலான முதலீடுகள் தமிழ்நாட்டிற்கு கிடைத்திடவும் வாழ்த்துகளை தெரிவித்துக் கொண்டனர்.

அப்போது, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், உங்களுக்குள் எந்தப் பிளவுகளும் ஏற்பட அனுமதிக்காதீர்கள் என்றும், ஆண் டுக்கு ஒருமுறையாவது தமிழ்நாட்டுக்குக் குடும்பத்துடன் வாருங்கள் என்றும் கேட் டுக்கொண்டார்.

தங்களைச் சந்தித்ததில் அளவில்லா மகிழ்ச்சியடைந்ததாகவும், அமெரிக்க வாழ் தமிழர்களின் நல்வாழ்வு சிறக்க வாழ்த்துக ளையும் தெரிவித்துக் கொண்டார்.

இந்நிகழ்வின்போது, முதல்வரின் துணை வியார் திருமதி.துர்கா ஸ்டாலின், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா, அயலகத் தமிழர் நலவாரியத்தின் தலைவர் கார்த்திகேய சிவசேனாபதி ஆகியோர் உடனிருந்தனர்.